## 2.3. இறையாட்சி விருந்து



☆ இப்படத்திலே நீர் எதைக் காண்கிறீர்?

☆ இக்கொண்டாட்டம் மகிழ்ச்சியாக அமைய எப்படியான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன?

☆ இதிலே நாம் எவ்வாறு கலந்து கொள்கிறோம்?

☆ அழைப்பை ஏற்று வந்தவர்களுக்கு என்ன கொடுக்கப்படுகிறது?

✧ மனிதன் உயிர்வாழ உணவு முக்கியத்துவம் வாய்ந்த ஒரு காரணியாக அமைகிறது.

✧ குடும்பமாக சேர்ந்து உணவருந்துவது, சமூக உறவின் வெளிப்பாட்டையும், உறவின் முக்கியத்துவத்தையும் வளர்க்கிறது.

✧ வரவேற்றல், ஒருமைப்பாடு, ஏற்றுக்கொள்ளுதல், பகிர்தல், ஆயத்தம் செய்தல் ஆகியவற்றை நாம் காண்கிறோம்.

திருவிவிலியப் பகுதி லூக்கா 14:15-24 ஐத் தேடி, வாசித்து, கற்று, விடை எழுதவும்.

1. ............................... விருந்தில் பங்கு பெறுவோர் பேறுபெற்றோர்.

2. ஒருவர் பெரிய விருந்து ஒன்றை ஏற்பாடு செய்து ........................... அழைத்தார்.

3. பணியாளரை அனுப்பி ............................................................... ஏற்பாடு செய்தாகிவிட்டது.

4. ஒருவர் ''.............................. ஒன்று வாங்கியிருக்கிறேன் அதை நான் கட்டாயம் போய்ப் பார்க்க வேண்டும்'' என்றார்.

5. எனது வீடு ............................ மக்களை வற்புறுத்திக் கூட்டிவாரும்.

ஆண்டவர் விண்ணரசுக்கான நம்பிக்கையின் பிணையையும், பயணத்திற்கான வழி உணவையும் விசுவாசத்தின் அருள் அடையாளமாக விட்டுச் சென்றிருக்கிறார். திவ்விய நற்கருணையானது சகோதர ஒன்றிப்புக்கான உணவாகவும் விண்ணக விருந்துக்கு முன் சுவையாகவும் உள்ளது.

இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடு
இன்றைய உலகில் திருச்சபை எண் 38

''கடவுள் தரும் உணவு வானிலிருந்து இறங்கி வந்து உலகுக்கு வாழ்வு அளிக்கிறது'' என்றார். அவர்கள் ''ஐயா இவ்வுணவை எங்களுக்கு எப்போதும் தாரும்'' என்று கேட்டுக் கொண்டார்கள் இயேசு அவர்களிடம் ''வாழ்வு தரும் உணவு நானே என்னிடம் வருபவருக்குப் பசியே இராது'' என்னிடம் நம்பிக்கை கொண்டிருப்பவருக்கு என்றுமே தாகம் இராது.
(யோவான் 6:33-35)

**செயற்பாடு :**

யோவான் 6:33-35 இன்படி, இறைவனோடு நெருங்கிய வாழ்வு வாழ நற்கருணையின் முக்கியத்துவத்தை கலந்துரையாடி கருத்துக்களை முன்வையுங்கள்.

இறைவனோடு ஆழமான உறவு கொண்டுவாழ நற்கருணை துணை செய்கிறது. இதனால், நான்

1. தன்னலத்திலிருந்து விடுபட்டு, பிறர் நலம் பேணுகிறேன்.
2. அவருடைய குணங்களில் வாழுகின்றேன்.
3. என்னிடமுள்ளவற்றைப் பிறரோடு பகிர்கிறேன்.
4. விண்ணக வாழ்க்கைக்கு என்னை ஆயத்தமாக்குகிறேன்.
5. எனது சிந்தனை, சொல், செயல்கள் தூய்மைப்படுத்தப்படுகின்றன.
6. அவர் மீது கொண்டுள்ள விசுவாசம் அதிகரிக்கின்றது.
7. அடிக்கடி திருப்பலியில் பக்தியோடு பங்கு கொள்கிறேன்.

நற்கருணையானது எம்மைப் பாவத்தளையிலிருந்து பாதுகாக்கிறது. இறைமகன் கிறிஸ்துவோடு நாங்கள் ஆழமான, அடர்த்தியான, நட்புறவு வைக்கின்ற பொழுது பாவம் எங்களைக் கிறிஸ்துவிலிருந்து பிரிக்க முடியாது. ஒப்புரவு அருட்சாதனமே எமக்குப் பாவமன்னிப்புத் தந்தாலும் நற்கருணையின் வழியாகவே திருச்சபையோடு முழுமையான ஒரு உறவை வைக்க முடியும்.

‘‘கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி’’ # 1395


## செம்மறியின் விருந்துக்கு

செம்மறியின் விருந்துக்கு
அழைக்கப்பெற்றோர் பேறுபெற்றோர்
அவ்விருந்தை உண்டிட
சென்றிடுவோம் இன்பம் பொங்க

இறைவன் தரும் விருந்திது - அதை
உண்ணத் தடையென்ன
உறையவரும் இறைவனை - நாம்
ஏற்கத் தடையென்ன
உள்ளக் கதவு திறந்தது அதன்
உள்ளே வாழுவாய்
உவகை என்னும் ஒளி கொணர்ந்து
என்னை ஆளுவாய்

உலகமெல்லாம் இணைவதும் - உன்
உள்ளம் ஒன்றிலே
இயற்கை நிறைவு கொள்வது - உன்
செயலின் பண்பிலே
மனித உள்ளம் மகிழ்வது உன்
புனித உறவிலே
மறையும் வாழ்வு மலர்வது உன்
மகிழ்வின் பங்கிலே

- இப்பாடலை தியானிக்கவும்.



பின்பு அவர் அப்பத்தை எடுத்து கடவுளுக்கு நன்றி செலுத்தி, அதைப் பிட்டு அவர்களுக்கு கொடுத்து, ''இது உங்களுக்காகக் கொடுக்கப்படும் எனது உடல்; எனது நினைவாக இவ்வாறு செய்யுங்கள் '' என்றார். அப்படியே உணவருந்திய பின்பு, அவர் கிண்ணத்தை எடுத்து, ''இந்தக் கிண்ணம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற என் இரத்தத்தால் நிலைப்படுத்தப்படும் புதிய உடன்படிக்கை.''

(லூக். 22:19,20)

இவ்வார்த்தைகள் தினமும் நிறைவேற்றப்படுகின்ற திருப்பலியிலே குருவானவரால் சொல்லப்படுகின்றன. இவ் வசீகர வார்த்தைகளை அவர் உச்சரிக்கின்ற போது இயேசு தன் உடலோடும், இரத்தத்தோடும் திவ்விய நற்கருணையில் பிரசன்னமாகிறார். ஆகவே நற்கருணையில் உண்மையான முழுமையான, பரந்த, ஆழமான இயேசுவின் பிரசன்னம் உண்டு. எனவே அவரைப் பெறுவதற்கு மிகுந்த விருப்போடு ஆயத்தம் செய்ய வேண்டும்.

## நற்கருணை பற்றிய கூற்றுக்கள்

- ✧ இயேசுவின் தொடர்ச்சியான பிரசன்னம் நற்கருணையில் உண்டு என்பதற்கு கி.பி. 2ம் நூற்றாண்டில் வாழ்ந்த புனித யுஸ்தீன் என்பவர் சான்று தருகிறார்.

- ✫ "திருச்சபையின் அருள் வடிவம் முழுவதும் தூய்மைமிகு நற்கருணையில் அடங்கியிருகிறது'' என திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர் (திருச்சபையும் நற்கருணையும் #10) குறிப்பிட்டுள்ளார்.

## செயற்பாடு :

1. திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர் தூய்மை மிகு நற்கருணையில் என்ன அடங்கியிருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்?
2. திருப்பலியில் வசீகர வார்த்தைகளைக் கூறிய பின் நற்கருணையில் இயேசுவின் தொடர்ச்சியான பிரசன்னம் (உடனிருப்பு) இருப்பதாக சான்று பகர்ந்தவர்.

I. புனித யுஸ்தீன் II.புனித இரெனியுஸ் III. தேர்த்தூலியன் IV. புனித அகஸ்தீன்

3. இயேசு அப்பத்தையும், பின்னர் இரசம் நிறைந்த கிண்ணத்தையும் எடுத்துக் கூறிய வசீகர வார்த்தைகளை மனனம் செய்க.


4. அர்த்தமுள்ள முறையில் நற்கருணையினால் ஊட்டம் பெற்று இறைதிட்டப்படி வாழ நீர் செய்ய வேண்டியவற்றைப் பட்டியல் படுத்துக,

   1. ..........................................................................................
   2. ..........................................................................................
   3. ..........................................................................................
   4. ..........................................................................................

## சிந்தனைக்கு

ஆகவே எவராவது தகுதியற்ற நிலையில் இந்த அப்பத்தை உண்டால், அல்லது ஆண்டவரின் கிண்ணத்தில் பருகினால், அவர் ஆண்டவரின் உடலுக்கும் இரத்தத்திற்கும் எதிராக குற்றம் புரிகிறார். எனவே ஒவ்வொருவரும் தம்மையே சோதித்தறிந்த பின்பே இந்த அப்பத்தை உண்டு கிண்ணத்தில் பருக வேண்டும். எனவே ஆண்டவருடைய உடல் என உணராமல் உண்டு பருகுபவர் தம்மீது தண்டனைத் தீர்ப்பையே வருவித்துக் கொள்கிறார்.

(1கொரி. 11:27-29)



## வாழ்க்கைக்கு:-

நீங்கள் கிறிஸ்துவின் உடலும் உறுப்பினரும் என்றால், உங்களது அருளடையாளமே ஆண்டவரின் மேசையில் வைக்கப்பட்டுள்ளது; உங்களது அருளடையாளத்தையே நீங்கள் பெறுகிறீர்கள். உங்களுக்கே நீங்கள் 'ஆமென்' (ஆம், அது உண்மையே) என பதிலளித்து அதை உரிமையாக்கிக் கொள்கிறீர்கள். ஏனெனில் ''கிறிஸ்துவின் உடல்'' எனும் வார்த்தைகளைக் கேட்கும்போது ''ஆமென்'' எனப் பதிலளிக்கிறீர்கள். எனவே, உங்களது ''ஆமென்'' உண்மையானதாக இருக்கவேண்டுமெனில், கிறிஸ்துவின் உடலில் உறுப்பினராக வேண்டும்.

- தூய அகுஸ்தீன் -

கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி # 1396